இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 07-11-2024

# ‘அதிகார சபையில் அடக்கமான போர்வீரன்’

**ஆறாவது முறையாக கழகத்தை ஆட்சியில் அமர்த்தி - தனது அயராத உழைப்பால் தமிழ்நாட்டை தரம் உயர்த்தி - வரும் திராவிட மாடல் முதலமைச்சர் - மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களை இந்தியாவின் மதிப்புமிகு இதழ்களில் ஒன்றான ‘இந்தியா டுடே’ என்ன சொல்லி அழைத்திருக்கிறது தெரியுமா? ‘HUMBLE SOLDIER’!**

**“அடக்கமான போர் வீரன்” !**

**வெறும் போர் வீரன் என்று சொல்லவில்லை, ‘அடக்கமான போர் வீரன்’ என்று சொல்லி இருக்கிறது ‘இந்தியா டுடே’. “நான் பக்குவப்பட்ட காலத்தில் பிறந்தவன் ஸ்டாலின். அந்த இயல்பு, அவரது நடவடிக்கையில் தெரியும்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் காமராசர் அரங்கத்தில் நடந்த குடும்ப நிகழ்ச்சி ஒன்றில் 15 ஆண்டுகளுக்கு முன்பு குறிப்பிட்டார். அதனைத்தான் ‘இந்தியா டுடே’ இப்போது சொல்கிறது!**

சொல்லுக்குச் சொல் - கல்லுக்கு கல் நின்று மோதிக் கொண்டிருப்பதில் நேரத்தைச் செலவு செய்பவர் அல்ல இன்றைய முதலமைச்சர். அவர் சாதித்துக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறார். பின்னால் நின்று புறம் சொல்பவர்கள் சொல்லை, அவர் காது கேட்காது. ஏனென்றால் அவரது பயணம் வேகமானது, விவேகமானது, அவருக்கானது அல்ல. நாட்டுக்கானது. மக்களுக்கானது.

“நான் எனக்கு வாக்களித்த மக்களுக்கும், என் மனச்சாட்சிக்கும் பயப்படுபவன்” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். அதனால்தான் அவரது போரை யாரைப் பற்றியும் கவலைப் படாமல், அடக்கமாக - அதேநேரத்தில் அழுத்தமாக நடத்திக் கொண்டிருக்கிறார். அதனைத் தான் ‘அடக்கமான போர் வீரன்’ என்று சொல்லி இருக்கிறது ‘இந்தியா டுடே’.

**அவர் முதலமைச்சராவதற்கு முன்பு வரை, அவர் கழகத் தலைவராக ஆவதற்கு முன்பு வரை, ‘இப்படி எல்லாம் சிறப்பாகச் செயல்படுவார்’ என்பதை அறியாத கூட்டம் அதிகம் இருந்தது. ‘அவர் சிறப்பாகச் செயல்பட்டுவிடக் கூடாது’ என்று கருதிய கூட்டம்தான் அது. ‘கலைஞருடன் எல்லாம் முடிந்து விடும்’ என்று கருதிய கூட்டம் அது. ‘முடித்துவிட வேண்டும்’ என்று கங்கணம் கட்டிய கூட்டம் அது.**

**அதுவரை ‘அடக்கமாக’ - இருந்து தலைவராக ஆனதும் ‘போர் வீரனாய்’ தோன்றினார் மு.க.ஸ்டாலின். தமிழினத்துக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் நான் இருக்கிறேன் என்று சொன்னார். தமிழினத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் மட்டுமா சொன்னார்? தனது எல்லைப் பரப்பை இந்தியா முழுமைக்கும் விரித்தார் தலைவர் ஸ்டாலின். இந்திய ஜனநாயகத்தைக் காக்கும் போர் வீரனாய் எழுந்தார்.**

2019 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுக்கு ஏற்படுத்திக் காட்டிய படுதோல்வியை, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா முழுமைக்கும் ஏற்படுத்த ‘இந்தியா’ கூட்டணியை உருவாக்கக் காரணமாக அமைந்தார் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தலைவர் கலைஞர் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அகில இந்தியத் தலைவர்கள் அனைவரையும் அழைத்து நடத்திய புகழஞ்சலிக் கூட்டம் முதல் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு வரை எத்தனை கூட்டங்கள்? அகில இந்தியக் கட்சிகளின் அனைத்துத் தலைவர்களையும் அழைத்து வந்து மேடையிட்டுக் கொடுத்தார். மேடையிட்டு மட்டுமா கொடுத்தார்? அவர்களுக்குள் இருந்த வேற்றுமை வாடையைப் போக்கினார். பா.ஜ.க. நீங்கலான அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும் என்பதற்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்தார் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

‘உங்களுக்குள் இருக்கிற அனைத்து வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும் மறந்து ஒன்று சேர்ந்தால்தான் வெற்றி சாத்தியம்’ என்று சொன்னார். காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் கூட்டணியை அமைக்கும் முயற்சிகளை சில மாநில முதலமைச்சர்கள் எடுத்தார்கள். அவர்களும் சென்னை வந்து தலைவர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்தார்கள். ‘அது வெற்றி பெறாது’ என்று முதல் வரியிலேயே நிராகரித்தார். அதனால் தான் முளையிலேயே அந்த முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அப்படிச் சொன்ன முதலமைச்சர்களும் ‘இந்தியா’ கூட்டணியில் பின்னர் இடம்பெற்றார்கள். அதனால்தான் ‘இந்தியா டுடே’ இந்தியா முழுமைக்குமான பட்டியலில் பத்துக்குள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நிறுத்தி இருக்கிறது.

இந்தியாவின் சக்தி வாய்ந்த மனிதர்கள் கொண்ட அந்தப் பட்டியலுக்கு ‘இந்தியா டுடே’ வைத்துள்ள தலைப்பு, ‘இந்தியாவின் அதிகார சபை’ என்பது ஆகும். வெறும் அதிகார சபை அல்ல! ‘இந்தியாவின்’ அதிகார சபை ஆகும். முதல் பத்து பேரில் எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

**★ அடக்கமான போர்வீரன்**

**★ தென் கோட்டையைப் பிடித்து வைத்திருப்பவர்.**

**★ தமிழ்நாட்டில் அவருக்குள்ள செல்வாக்கு காரணமாக அவரின் குரல் டெல்லி அதிகாரத்தின் செவியை எட்டுகிறது.**

**★ தமிழ்நாட்டின் 39 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி 70 விழுக்காடு வாக்குகளுடன் வெற்றி வாகை சூடியது.**

**★ எல்லா மாநிலங்களிலும் பா.ஜ.க.வுக்கு சில தொகுதிகள் கிடைத்த சூழலிலும் தமிழ்நாட்டில் ஒரு இடம்கூட பா.ஜ.க.வுக்குக் கிடைக்காமல் செய்துவிட்டார்.**

**★ தென்னிந்தியாவில் இந்தியா கூட்டணிக்கு எஃகு போல திகழ்கிறார்.**

**★ 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் இலக்கை நோக்கி செயல்பட்டு வருகிறார்.**

**★ பார்ச்சூன் 500 நிறுவனங்கள் உட்பட 130 நிறுவனங்களிடம் இருந்து ரூ.9.74 லட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளார்.**

**ஆட்சியையும் கட்சியையும் எப்படி வைத்துள்ளார் என்பதையும் சொல்லி, எட்டாவது இடத்தை எப்படி எட்டினார் என்பதையும் இந்த எட்டு வரிகளுக்குள் சொல்லிவிட்டார்கள்.**

- இவை அனைத்தும் ‘இந்தியா டுடே’ வழங்கிய பாராட்டுப் பத்திரங்கள் ஆகும். ‘இந்தியா டுடே’வுக்குத் தெரிவது, இங்குள்ள சில தற்குறிகளுக்குத் தெரியவில்லை. தெரிந்தாலும், அதை உணரும் திறமில்லை போலும்!

**இதுகள் உள்ளூரில் உளறிக் கொண்டு கிடக்கட்டும். முதலமைச்சர் ‘அடக்கமான’ புகழை உலகளவில் பெறட்டும்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.11.2024) கோயம்புத்தூர், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்காவின், முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில், 167.25 கோடி ரூபாய் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, செம்மொழி வனம், மகரந்த வனம், மூலிகை வனம், நீர் வனம், நட்சத்திர வனம், நலம்தரும் வன, நறுமண வனம் போன்ற பல வகையான தோட்டங்கள், சிற்பங்கள், இயற்கை அருங்காட்சியகம், திறந்த வெளி அரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் செம்மொழிப் பூங்காவின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ரூ.300 கோடி மதிப்பீட்டில்

# கோவையில் தந்தை பெரியார் நூலகம் - அறிவியல் மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**கோவை, நவ. 7-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.11.2024) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு அரசின் 2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், கோவை வாழ் பொதுமக்களிடையே, குறிப்பாக இளைய தலைமுறையினரின் அறிவுதாகத்தை மேலும் தூண்டும் விதமாக ஒரு மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையம் கோயம்புத்தூரில் அமைக்கப்படும் என்றும், இதில் உலகத்தரம் வாய்ந்த நூல்கள், பத்திரிகைகள், இதழ்கள் மற்றும் இணைய வளங்களும் இடம்பெறுவது மட்டுமின்றி, விண்வெளி, எந்திரவியல், மெய்நிகர்தோற்றம், இயற்கை அறிவியல் என பல்வேறு அறிவியல் மற்றும் பொறியியல் பிரிவுகளைச் சார்ந்த வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, கோவை மத்திய சிறைச்சாலைக்கு சொந்தமான 6 ஏக்கர் 98 சென்ட் நிலத்தில் (கோவை வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமம்) 1.98 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இந்த மையத்தில், தரைத்தளத்தில் ஆடிட்டோரியம் மற்றும் அறிவியல் மையம், முதல் தளத்தில் அறிவியல் மையம், இரண்டாம் தளத்தில் குழந்தைகளுக்கான நூலகம் மற்றும் போட்டி தேர்வுகளுக்கான நூலகம், மூன்றாம் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நூலகம் மற்றும் தலைமை நூலகர் அலுவலகம், நான்காம் தளத்தில் தமிழ் புத்தகப்பிரிவு மற்றும் சொந்த புத்தகம் படிக்கும் பிரிவு, ஐந்தாம் தளத்தில் தமிழ் புத்தகப்பிரிவு மற்றும் இன்குபேஷன் சென்டர், ஆறாம் தளத்தில் பருவ இதழ்கள் மற்றும் இன்குபேஷன் சென்டர், ஏழாம் தளத்தில் அறிவியல்மையம், ஆங்கில புத்தகப்பிரிவு மற்றும் டிஜிட்டல் நூலகம் ஆகியவை அமைக்கப்படவுள்ளன.

மேலும், 4 மின் தூக்கிகள், 10 KLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பேனல் அறை, குடிநீர் மற்றும் கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது. இக்கட்டடமானது, 2026 ஜனவரி மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கணபதி பி. ராஜ்குமார், கே. ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி சோ. மதுமதி, பொது நூலக இயக்குநர் (பொறுப்பு) முனைவர் பொ. சங்கர், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்!

## மாணவ - மாணவிகளுக்கு நலஉதவிகள் வழங்கினார்!

விழுப்புரம், நவ.7 –

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 5.11.2024 அன்று விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார்.

விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள ஆசிரியர் பயிற்சி கல்லூரி வளா கத்தில், விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி உண்டு, உறைவிட பள்ளி செயல்பட்டு வருகின்றது.

பள்ளி தகவல் தொகுப்பு மேலாண்மை அமைப்பின் (எமிஸ்) மூலமாக பெறப்பட்ட தகவல்களில், மாணவ, மாணவிகளின் கல்வித் தகுதிகளின் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டம் முழுவதும் இருந்து அரசு பள்ளிகளைச் சேர்ந்த சிறந்த மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் ஐ.ஐ.டி, மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் பயில பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு பள்ளி வளாகத்திலேயே விடுதி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிற்றுவிக்கப்பட்டு வரும் இப்பள்ளியில் மொத்தம் 287 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். உண்டு உறைவிட வசதியுடன் செயல்பட்டுவரும் இப்பள்ளியில் 181 மாணவ, மாணவியர்கள் 11 மற்றும் 12ம் வகுப்பு பயின்று வருகின்றார்கள்.

இப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்ட துணை முதலமைச்சர் அவர்கள் வருகை பதிவேட்டினை பார்வையிட்டு தங்கியுள்ள மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையை சரிபார்த்தார். மேலும் விடுதியின், சமையற்கூடம், மாணவ, மாணவியர்கள் தங்குமிடம் ஆகியவற்றை பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடி கற்றல் திறன் மேம்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டார். அதன டிப்படையில் மாணவ, மாணவியர்களுக்கு ஆங்கில அகராதி (English Dictionary) மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். மாணவ, மாணவியர்கள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வசதிகளை பயன்படுத்தி, நாட்டின் தலை சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் இடம் பெறும் வகையில் நன்கு கல்வி பயில வாழ்த்து தெரிவித்தார்.

மேலும் துணை முதலமைச்சர் அவர்கள், விடுதியில் குடிநீர் வசதி, சமையலறை, கழிப்பிட வசதிகளையும், பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டுள்ள சிசிடிவி அமைப்பின் பதிவுகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உணவுப் பொருட்களின் இருப்பு குறித்தும், மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவு வகைகளின் விவரங்கள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது வனத் துறை அமைச்சர் முனைவர். க. பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன் (விழுப்புரம்), அன்னியூர் அ.சிவா (விக்கிரவாண்டி), சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர். தாரேஸ் அஹமது, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சுருதஞ் ஜெய் நாராயணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் உள்பட ஆசிரியர்கள் உடனிருந்தனர்.




திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்கம் பொதுக்கூட்டம் திருத்தணியில் நடைபெற்றது அப்போது த.வெ.க.வைச் சார்ந்த கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் இணைந்தார்கள். அருகில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, சிறுபான்மையினர் வாரியம் துணைத் தலைவர் இறையன்பு குத்தூஸ், பேச்சாளர் ம.மோகநிதி, சண்முகநாதன், மாஸ்டர். பெ.சேகர், ஒ.ஏ.நாகலிங்கம், மாஸ்டர். இ.குருதாஸ், கே.திராவிட பக்தன், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எ.கே.ஆதாம், மு.சுப்பிரமணியம், பி.ராஜேஸ்வரி, இரவிந்திரநாத், நகரச் செயலாளர் வி.வினோத்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டிகே .பாபு உள்பட பலர் உள்ளனர்.